87

# கம்பனில் அரசியல் அறம்

**முனைவர் தி. சீதாராமன்**
**உதவிப் பேராசிரியர்,தமிழ்த்துறை**
**பி.எஸ். அப்துர் ரஹ்மான் கிரசண்ட் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம்**
**வண்டலூர், சென்னை - 600 048.**

தமிழ்க் கூறும் நல்லுலகத்தில் கவிச்சக்கரவர்த்தி என்று இருவர் இருப்பினும் கவிச்சக்கரவர்த்தி என்றதும் கம்பரே முன் நிற்பார். இராமாயணம் கம்பருக்குமுன் வடமொழியில் படைக்கப்பட்டு இருப்பினும் கம்பர் தமிழ் மொழிக்கேற்ப பண்பாடு, பழக்கவழக்கம் போன்றவற்றின் அடிப்படையில் கற்பவரின் மனதில் இன்புறுத்தவும் அறிவுறுத்தவும் அறம் வெல்லும் பாவம் தோற்கும் என்ற தத்துவத்தை உலகிற்கு உணர்த்துவதற்காகப் படைத்திருக்கிறார். அரசியல் அறத்தை இப்பெரும் காப்பியத்தில் கம்பரின் அங்கொன்றும் இங்கொன்றுமாக எடுத்துக்காட்டப்படுகிறது.

காப்பியம் படைப்பதில் தன்னிகரற்றவர் கம்பர் என்பது மட்டுமல்லாது ஆழமான அரசியல் உணர்வும் நாட்டை ஆள்வோருடைய வலிவும் வனப்பும் மெலிவும் ஆளுமை சார்ந்த உளவியல் அறிவும் வாய்ந்தவர் கம்பர்.

இராமகாதை முழுவதும் பெரிதும் அரசியல் நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அரசியல் தொடர்புடையவர்களே காப்பியத்தின் தலைமை மாந்தர்களாக அமைந்துள்ளனர். அயோத்தி, மிதிலை, கிட்கிந்தை, இலங்கை ஆகிய நான்கு அரசுகளையும் கம்பர் தன் காப்பியத்தில் படைத்துள்ளார்.

அயோத்தி, கிட்கிந்தை, இலங்கை ஆகிய மூன்று அரசுகளிலும் ஏற்பட்ட குழப்பங்களுக்கும் சிக்கல்களுக்கும் அரசியல் நெறிகளின் சீரழிவு மட்டுமின்றி ஆளுகின்ற தலைமையின் பலவீனங்களையும் விழிப்புணர்வின்மையும் காரணம் என்பதைக் கம்பர் புலப்படுத்துகிறார்.

அரசியல் செயல்களில் பங்குபெறும் உரிமை அரசியல் சுதந்திரமாகும் தயரதன் செய்யும் போது கம்பர் மக்களைக் குறை கூற வைக்கிறார். அவன் ஆணையைப் புறக்கணித்து இராமனையே மன்னனாகத் தேர்ந்து அவனோடு நகர் நீங்க வைக்கிறார். சடையனின் மரபினோர் மகுடம் எடுத்துத் தந்தனர் எனக் கூறி மக்களை இறைமையில் பங்கு பெறச் செய்கிறார். இவை எல்லாம் அரசியல் செயலில் மக்களையும் மன்னர்களையும் மிக நெருக்கமுடைய செயல் ஒரு விதமான அரசியல் அறத்தை வெளிக்காட்டுகிறது.

மன்னன் முறை அறிந்து மக்களின் நலனைக் கருதி ஆட்சி நடத்துபவனாக இருந்தால் நிலமகள் தன் சுமை இறக்கி நிம்மதிப் பெருமூச்சி விடுகிறாள் என்கிறார் கம்பர்.

முறை அறிந்து அவாவை நீக்கி
முனிவுழி முனிந்து வெஃகும்
.................................................
.................................................
நிறைபதம் சொரிந்து வங்கம் நெடு



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

முதுகு ஆற்றும் நெய்தல் (50)

என்கிறார் கம்பர்.

அரசியல் ஆணவம் கண்ணை மூடுகிறது. அறிவைக் கெடுக்கிறது. நெறிபிறழச் செய்கிறது. இக்கருத்தைக் கம்பர் பரதன் வாயிலாக வெளிப்படுத்தி அரசியல் அறத்தைக் கற்பிக்கிறார்.

அழிவு அரும் அரசியல் எய்தி ஆகும் என்று,
இழிவரு, சிறு தொழில் இயற்றி, ஆண்டு தன்
வழிவரு தருமத்தை மறந்து மற்று ஒரு
பழிவரு நெறி படர் பாதகன் ஆக, யான் (2209)

அரசேற்றவன் அறவழியல் நடக்க வேண்டும். வேறு வழியில் சென்றால் பாவியாகிறான் அவனைப்போல நானும் ஆவேனாக என்று பரதன் தனக்குத் தானே நொந்து சூ;ரைத்துக் கொள்வதாக கம்பர் அரசியல் அறத்தை கூறுகிறார்.

சனக மன்னனின் நாடு விதேக நாடு. அதன் தலைநகர் மிதிலை சனகனின் அரசியலைக் குறிப்பிடும் கம்பர் பாலகாண்டத்தில் மிதிலைக் காட்சிப் படலத்தில் நகரத்தின் சிறப்பைக் கூறும்போது குற்றமில்லாத அரசும் மக்களுக்கும் மற்ற உயிர்களுக்கும் எவ்விதக் குறையும் இல்லை என்பதைக் கூறுகிறார்.

மை அறு மலரின் நீங்கி
யான் செய் மா தவத்தின் வந்து
செய்பவன் இருந்தாள் என்று
கைகளை நீட்டி அந்தக்
……………………………………………
………………………………
ஐயனை ஒல்லை வா என்று
அழைப்பது போன்றது அம்மா! (480)

கடிநகர் - காவல்மிக்க மிதிலை நகர் என்கிறார். மன்னன் மக்களையும் மற்றச் செயல்களையும் சிறப்புறச் செயலாற்ற ஒரு காவல் என்ற ஒரு கட்டுப்பாட்டின் கீழ் அமைத்து காப்பாற்ற வேண்டும் என்ற அறத்தைப் போதிக்கிறார் கம்பர்.

கிட்கிந்தையின் அரசியல் அறத்தைக் குறிப்பிடும் கம்பர் அங்கு வானரர் தவிர வேறு இனங்கள் இருந்ததாகக் காட்டவில்லை. எனவே கிட்கிந்தையில் வாலி சுக்கீரிவன் ஆகிய இருவரின் ஆட்சி மாறி மாறி நிகழ்கிறது.

இராமன் வாலியின் அரசை நிரம்பினான் ஒருவன் காத்த நிறையரசு என்று பாராட்டுகிறார். இதனால் வாலி அறிவு, ஆண்மை, பெருமை என்னும் குணங்களால் நிரம்பியவன் என்றும், அரசுக்கு வேண்டிய அங்கங்கள் எல்லாம் நிறைவாகப் பெற்றது அவன் அரசு என்றும் அறிய முடிகிறது.

அரசியல் நெறிகளையும் அரசனுடைய நல்லியல்புகளையும் எடுத்துக் கூறும் கம்பர் இராமன் வாயிலாக சுக்கிரீவனுக்குச் சொல்கிறான். கிட்கிந்தா காண்டத்தில் அரசியல் படலம் என்றே தனி ஒரு படலத்தைப் படைத்திருக்கிறார் கம்பர். வாலியை வதம் செய்த இராமன் சுக்கிரீவனுக்கு அரசியல் நெறியைச் சுட்டிக் காட்டுகிறார்.

“வாய்மை சால் அறிவின்
வாய்த்த மந்திர மாந்தரோடும்
தீமை தீர் ஒழுக்கின் வந்த
திறத் தொழில் மறவரோடும்
தூய்மை சால் புணர்ச்சி பேண் துகள்
அறு தொழிலை ஆகிய
சேய்மையோடு அணிமை இன்றி
தேவரின் தெரிய நிற்றி (4122)

என்கிறார் கம்பர். இலங்கையின் அரசியலைக் குறிப்பிடும் கம்பர் இராவணனின் அரசு ஒரு வல்லரசு. இராவணன் அருந்தவமாற்றி அளவற்ற ஆற்றலைப் பெற்றிருப்பினும் அந்த ஆற்றலால் செருக்கி அறமிலா வழியில் ஆட்சி செய்கிறான். தன் ஆற்றலால் அயலவர்க்கு அளப்பரும் துன்பம் விளைவிக்கிறான். அவர்களை அடிமைப்படுத்தி அல்லற்படுத்துகிறான். அறமிலா வழியல் அவன் ஈட்டிய அளவற்ற செல்வமும் அவனைத் தீய வழியிலேயே செலுத்துகிறது.

ஓர் அரசனுக்கு இருக்கக் கூடாத குணங்களை எடுத்துக் கூறுகிறார் கம்பர். காமம், வெகுளி, கடும்பற்றுள்ளம், மானம், உவகை, மதம் என்ற ஆறு பகை வர்க்கமும் அவனிடம் ஒருங்கே குடிபுகுகின்றன. இராவணன் மாண்பிறந்த மானம் பேசி மாண்பிழக்கி தன்னையே வியந்து தவறிழைக்கிறான்.

“முடியாட்சியை உடைய அரசு எவ்வளவுதான் அறிவும் திறமையும் பெற்றிருந்தாலும் நாகரிகமும் அறிவும் திறமையும் பெற்றிருந்தாலும் நாகரிகமும் அறிவும் பெற்ற மக்களுக்குப் பொருந்தாத குறையுடைய அரசாகும். அரசியல் அக்கறை சமூக ஒற்றுமை ஆகியவற்றை வளர்ப்பது ஒரு நல்லரசின் குறிக்கோளாகும். முடியாட்சி இந்தக் குறிக்கோளை எப்போதும் தோல்வியே அடைகிறது” என்பார் அறிஞர் கெட்டல். இத்தகைய அரசியலை நடத்தினான் இராவணன்.

கம்பர் போர்ப் பற்றிய செய்திகளை ஆறு காண்டத்திலும் வைத்திருந்தாலும் யுத்த காண்டம் என்பது போர் பற்றி செய்திகளையே தாங்கியுள்ளது. கம்பன் காப்பியத்தில் பெரும்பகுதியைக் யுத்த காண்டம் நிகழ்வுகளாக அமைந்திருப்பது குறிப்பிடத்தகுந்தது. காப்பியத்தின் முதன்மையான நிகழ்ச்சி போரே ஆகும். இராம இராவணப் போரே இராமாயணக் கதை என மு. இராகவையங்கார் குறிப்பிடுவது இங்கு சுட்டத்தக்கது. காப்பியத்தில் பல்வேறு போர் வகைகளும் போர் அறத்தையும் கூறி இருக்கிறார் கம்பர்.



Bharath Institute of Higher Education And Research
பாரத் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம்,கலை மற்றும் அறிவியல் புலம்,தமிழ்த்துறை
பன்னாட்டு ஆய்வுக்கருத்தரங்கம்
"தமிழ் இலக்கியங்களில் உலக இலக்கியச் சிந்தனைகள்"
பிரணவ் தமிழ் மின்னியல் ஆய்விதழ் சென்னை volume:1 Issue:3 October 2022.
ISSN:2582-9599

மற்போர், யானைப்போர், தேர்ப்போர், மாயப்போர், இரவுப்போர், மறைந்து நின்று செய்த போர், தேவர் துணை செய்யும் போர் எனப் பல போர்களைக் காண முடிகின்றது.

போர் அறத்தைச் சொல்லும் போது ஒருவர் வீரத்தை மற்றொருவர் போற்றிப் பேசும் உயரிய பண்பைக் காப்பியத்தில் பல இடங்களில் காண முடிகின்றது. இலக்குவனின் வில்லாற்றலைத் தேர்ச் சக்கர காவலனிடம் இந்திரச்சித் புகழ்ந்து கூறுவதும், இலக்குவன் இந்திரச்சித்தின் வில்லாற்றலை வியந்து பாராட்டுவதும் போர் அறமாகப் பார்க்க வேண்டியதாகின்றது.

“வீரர் என்பார்கட்கு எல்லாம் முன் நிற்கும் வீரர் வீரன்
போர் என்பாரர்கள் ஆகும் பெற்றியின் பெற்றித்து ஆமே” (9145)

என்று இந்திரசித்தின் வீரத்தைக் கண்டு இலக்குவன் மட்டும் இன்றி தேவர்களும் வியக்கும் நிகழ்வும் உண்டு. முதல் போர்புரி படலத்தில் அனுமனுக்கும் இராவணனுக்கும் அவரவர் வலிமையை நிலைநாட்டும் சூழலில் அனுமன் இராவணனின் ஆற்றலையும் இராவணன் அனுமன் ஆற்றலையும் நேருக்கு நேர் புகழ்ந்து பேசிக் கொள்வதை உண்மையான வீரர்களுக்கு உரியப் பண்புமிகு அறத்தை கம்பர் சுட்டிக் காட்டுகிறார்.

“வீரற்கு உரியது சொற்றனை விறலோய் ஒரு தனியேன்
நேர் நிற்பவர் பிறர் நீ அல்லவர் இனிநின்
பேருக்கு உலகு அளவே; இனி உளவே பிற என்றான்” (9204)

பெரும் வீரர்கள் போர்செய்யும் போது பகைவர்கள் தளர்ச்சி அடையும் போது அவர்களோடு நிறுத்திவிடும் உயரிய போர் அறத்தை காப்பியத்தில் கம்பர் காட்டுகின்றார். தளர்ந்து நின்ற இராவணனைப் பாரத்து இன்று போய் நாளை வா என இராமன் கூறுவான் (7266) கைகளற்ற நிலையில் மாலி போர் செய்ய இந்நிலையில் அவனோடு போர் செய்ய இயலாது என நினைத்து இலக்குவன் செல்வதும், இறுதிப் போரில் இராவணன் தளர்ந்து உணர்விழந்து தேரில் சாயும் போது இராமன் அம்பு தொடுப்பதை நிறுத்துவதும், தளர்ந்து கிடக்கும் நிலையிலேயே இராவணனைக் கொன்று விடுக (7265) என மாதவியின் ஆலோசனையை இராமன் ஏற்க மறுப்பதும் (7267) இவ்வுயரிய போர் அறத்தை வெளிக்காட்டுகிறார் கம்பர்.

கம்பர் இராவணனை இராமனுக்கு இணையான வீரனாகவே படைத்துக் காட்டுகிறார். அத்தகு ஆற்றல் வாய்ந்த இராவணன் முதல் போர்புரிப் படலத்தில் மகுடம் இழந்து நாணி நின்ற நிலை நிலையில் இராமன் மென்மேலும் தாக்குதல் நடத்தாது.

“ஆள் ஐயா உனக்கு அமைந்தன மாருதம் அரைந்த
பூளை ஆயின கண்டனை இன்று போய் போர்க்கு
நாளை வா என நல்கினன் நாகு இளங்கு முகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்” (7271)

என்று போர் அறத்தைக் காட்டுகிறார்.

"மடை துறந்து மயங்கிய பண்பினான்
..............................................................
குடை துறந்துபோர், என் கருத்து என்றான்"; (9876)

என்று தளர்ச்சியுற்ற இராவணனைக் கொல்வது நீதி இல்லை என்பதை இராமபிரான் வாயிலாகப் போர் அறத்தைப் பதிவு செய்கிறார் கம்பர்.

சமூகம் என்பது மக்களின் வாழ்வியல் முறைகளை உள்ளடக்கியது. வாழ்க்கையில் சிறப்பாக வாழ கலை, இசை, நடனம், விளையாட்டு, அரசியல், போர் போன்றவற்றில் காணலாகும் அறத் தன்மைகள் கம்பனில் காண முடிகின்றது.